உ

ஸ்ரீவாணீ சகாயம்.

# கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபெறநில்.

| | | |
|---|---|---|
| வெண்டாமரை ௬. | 1918-ம் ஆூ மார்ச் மீ | இதழ் ௩. |


## திருக்குறள் வியாசம்.

௬-ம் அதிகாரம்.

### வாழ்க்கைத் துணைநலம்.

வாழ்க்கைத் துணைநலமாவது இல்வாழ்க்கைக்குத் துணையாகிய மனையாளது நன்மையாம்.

ஒருவன் மனைவியானவள் துறந்தவரைப் பாதுகாத்தல், விருந்தினரை உபசரித்தல், வறியவரிடத்து அருளுடைமை முதலிய நற்குணங்களை யுடையவளா யிருத்தலுமன்றி, வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களறிந்து காப்பாற்றி வைத்தலும், உணவு சமைத்தற் றொழில்வன்மையும், ஒப்புரவு (உபகாரம்) செய்தலும் முதலிய நற்செய்கைகளை யுடையவளா யிருத்தலும்வேண்டும். அன்றியும் முதலையறிந்து அதற்குத் தக்க செலவு செய்பவளாதலும் வேண்டும். ஆகவே 1. 'இல்லறத்துக்குத் தக்க நற்குண நற்செய்கைகளை யுடையவளாய்த் தன்னைக்கொண்டவனது வருவாய்க்குத் தக்க வாழ்க்கையை யுடையாள் அவ் வில்லறத்திற்குத் துணையாவாள்' என்க.

---

1. மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

இதற்கு மாறாக, 2. 'மனையறத்திற்கு வேண்டிய நற்குண நற்செய்கைகள் ஒருவன் மனையாளிடத்தில் இல்லையானால், அவ்வில்வாழ்க்கை, செல்வத்தால் எவ்வளவு பெருமையுடையதாலும் அப்பெருமையை யுடையதன்று.' செல்வத்தினாலேயே வாழ்க்கை பயன் படுதலில்லை. மேலும், 3. 'ஒருவனுக்கு மனையாள் நற்குண நற்செய்கையளாயிருந்தால் இல்லாதது யாது? அம்மனையாள் அப்படிப்பட்டவளாகா திருந்தால் உள்ளதுயாது?' ஆதலின் இல்வாழ்க்கைக்கு வேண்டுவது மனையாளது நற்குண நற்செய்கைகளேயன்றி மற்றவை யல்ல வென்க.

மகளிர் கற்பின் சிறப்பு வழுத்த அரிது. கற்புடையாள் போல அறம் பொரு ளின்பங்கட்குக் காரணமாவன பிற இல்லை. ஆதலின், மனைவிமாட்டு, 4. 'கற்பென்னும் கலங்கா நிலைமை உண்டாயிருக்கப்பெற்றால், ஒருவன் பெறுதற்குரிய பொருள்களுள் மனையாளினும் மேம்பட்ட பொருள்கள் எவை யிருக்கின்றன?' ஒன்றுமில்லை.

அன்றியும், கற்புடையவட்குக் கணவனே கடவுள். வேறு கடவுளை அவள் கருதவேண்டியதில்லை. இங்ஙனம் 5. 'பிறதெய்வத்தை வணங்காளாகித் தனதுதெய்வமாகிய கணவனைத் தொழாநின்று துயிலெழுபவள், 'பெய்' என்று சொல்ல மழைபெய்யும்.' கற்புடையவளது வல்லமை மிகப்பெரிதாதலின், தெய்வமும் அவள் ஏவல் செய்யுமென்க.

ஆதலின், 6. 'கற்பினின்றும் வழுவாமல் தன்னைக் காப்பாற்றிக்கொண்டு, தன்னைக்கொண்டவனையும் உண்டி முதலியவற்

---

2. மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்.

3. இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதெ
னில்லவண் மாணாக் கடை.

4. பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

5. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

6. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

ருல் உபசரித்து, தம்மிருவரிடத்தும் நன்மையமைந்த புகழை நீங்காமற் காப்பாற்றி, மேற்சொல்லிய நற்குண நற்செய்கைகளிலும் மறவி யில்லாதவளே பெண்ணுவாள்.' கற்புடைமையால் அவள் வாழும் ஊராரனைவரும் அவளைப் புகழுவரென்க.

கற்புடை மகளிர்க்குக் காவலும் வேண்டுமோ? நெஞ்சைக் கற்புநெறியில் நிறுத்தும் நிறையுடையார்க்கு மதிலும், வாயில் காவலும் முதலிய வேறு காவல்கள் வேண்டுவதில்லை. 7. 'மகளிரைத் தலைவர் சிறையினலே காக்கும் காவல் என்ன பயனைச் செய்யும்? அவர் தமது நிறையால் காக்கும் காவலே முதன்மையான காவல்' ஆகும். ஆதலின் கற்புடைய மகளிர் தம்மைத் தாமே காத்துக்கொள்ள வல்லவரென்க.

கற்புடை மகளிர் மண்ணுலகில் மட்டுமா புகழெய்துவர்? 8. 'பெண்டிர் தம்மைக் கொண்டகணவனை வழிபடுதல் பெறுவாராயின், தேவர் வாழும் உலகின்கண் அவரால் செய்யப்படும் பெருஞ் சிறப்பினையும் பெறுவர்.' கணவனை வழிபட்ட நல்வினையால் விண்ணுலகிற் சென்று அங்குள்ளார் தம்மை வழிபட மேன்மை யெய்துவரென்க.

தலைவர்கள் தத்தம் மனைவியர்களாலேயே பெருமை பெறுகின்றார்கள். கற்புள்ள மனைவியுடையவனைப் பகைவரும் நன்கு மதிக்கின்றனர். 9. 'புகழை விரும்பிய மனையாளை யில்லாதவர்க்கு, தம்மை யிகழ்ந்து பேசும் பகைவர்முன் ஆண்சிங்கம்போல நடக்கும் பெருமிதநடையில்லை.' மனையாள் தம்மிருவரிடத்தும் நன்மையமைந்த புகழைக் காப்பாற்ருதவிடத்து எங்ஙனம் பெருமையுண்டாகும்? உண்டாவது சிறுமையே யென்க.

---

7. சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை.

8. பெற்ருற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு.

9. புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை.

ஆதலின் இல்வாழ்க்கையில் நின்ற தலைவனுக்கு நன்மையெது? அதற்குப் பயன்யாது? என வினவுமிடத்து, 10. 'மனையாளது நற்குண நற்செய்கைகளை ஒருவனுக்கு நன்மையென்று சொல்லுவர் அறிந்தோர்; நல்ல புதல்வரைப் பெறுதலை அவை தமக்கு நல்ல அணிகலமென்று சொல்லுவர்.' என்க.

இதுகாறுங் கூறியவாற்றால் நற்குண நற்செய்கைகளையுடையவளாய் வாவுக்குத்தக்க செலவு செய்பவள் இல்வாழ்க்கைத். துணையாவாள் என்பதும், இல்வாழ்க்கைக்கு வேண்டுவது மனையாளது நற்குண நற்செய்கையே மற்றவையல்ல வென்பதும், கற்புடைய மனைவியைப் பெறுதலே ஒருவனுக்குச் சிறந்த பேறென்பதும், கற்புடையவளுக்குத் தெய்வமும் ஏவல்செய்யு மென்பதும், பெண்களுக்குக் கற்பினாலேயே புகழுண்டாகு மென்பதும், கற்பே மகளிர்க்குக் காவல் என்பதும், கணவரை வழிபடும் பெண்கள் கடவுளரால் வழிபடப் பெறுவரென்பதும், மனையாள் புகழைக் காப்பாற்றாதவிடத்துக் கணவனுக்குப் பெருமையில்லையென்பதும், நல்ல மனைவியைப்பெற்று நல்ல புதல்வரைப் பெறுதலே ஒருவன் இல்வாழ்க்கைக்கு நன்மை யென்பதும் பிறவும் பெறப்பட்டன.

---

## தன்னிலையிலிருந்து உயர்வதற்குரிய பழக்கங்கள்.

### மூச்சுப் பழக்கம்.

அதிகாலையில் நித்திரைவிட்டெழுந்து அவசியகருமங்களை முடித்துக்கொண்டு, சுத்தமானதும் வெளிக்காற்றுலாவக்கூடியதுமான ஓரறையில் சுகாசனம், அல்லது கமலாசனம் முதலிய தனக்குச் சௌகரியமாயுள்ள ஓர் இருப்பில் உட்கார்ந்து, இடுப்பை நிமிர்த்தி மார்பை முன்னுக்குத்தள்ளி நிமிர்ந்து உட்கார்ந்து மனதிலுள்ள மற்ற விஷயங்களை யெல்லாம் விலக்கிவிட்டு, இவ்வுலகத்தில் எண்ணிறந்த உயிர்களையும் தன்னையும் படைத்துக் காத்துவரும் கடவுள் ஒருவர் இருக்கிறாரென்பதை உறு

---

10. மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல நன்மக்கட் பேறு.

தியாய் நம்பி, பயத்தையும் கவலையையும் சந்தேகத்தையும் விட்டு, தைரியத்தையும் சந்தோஷத்தையும் நிச்சயத்தையு முடையவனுயிருந்து நாசி முனையில் தன்னுடைய மூச்சு நடைபெறுவதைக் கவனிக்கவேண்டும். சுமார் ஐந்துநிமிஷம் கவனித்தால் அதிவேகமாக நடைபெறும் சுவாசம் மெதுவாய் நடைபெறும். நாவில் உமிழ்நீர் பெருகும், மனத்தெளிவும் சுகமும் தோன்றும். அவ்விதம் கால்மணிநேரம் காலை மாலை பழக வேண்டும்.

## தேகப் பழக்கம்.

சுத்தமான ஒரு சுவரின் ஓரத்தில் தன் உடலின் பின்புறம், புஜம், முதுகு, இடுப்பு, குதிகால்களின் பின்புறம் முதல் தலையின் பின்புறம் வரையில் தேகத்தின் பின்பக்கம் முழுவதும் சுவரில் பொருந்தும்படி நிமிர்ந்து நின்று தலையை உயர்த்தி, தாழ்வாயின் முன்பக்கத்தைக் கழுத்தின் பின்பக்கமாக எவ்வளவு தூரம் நிமிர்க்கக்கூடுமோ அவ்வளவு நிமிர்த்தி, கைகள் இரண்டு தொடைகளைச் சேர்ந்திருக்கும்படி தொங்கவிட வேண்டும். மார்பை முன்தள்ளி வயிற்றை உள்ளடக்கிப் புஜங்களை ஆசையவிடக்கூடாது. இதுதான் நம் உடல் இருக்கவேண்டிய சரியான நிலை. அந் நிலையில் நிற்கும்போது உன் தேகத்திலுள்ள தசை நார்கள் வலிவுற்றிருப்பதைக் காண்பாய். மேலும் உன்னுடைய மார்பு, புஜங்களைப் பின்னுக்குத் தள்ளுவதால் வயிற்றின் மேல்புறத்திலுள்ள தசைகள் முன்னுக்கு வாராமல் சுருங்கி விலா எலும்புகள் மேல்தூக்கப்பட்டு முன்னுக்கு வருவதையும் காண்பாய். மேற்சொன்ன இரண்டும் நன்றாய்த் தெரியும் வரையில் சுவரின் பின்பக்கத்தில் நின்று முன்சொல்லியபடி பழகு.

தேகத்தின் தசைகளையும் நரம்புகளையும் வலிவுடனிருக்கச் செய்யவும், மார்பை முன்னுக்குத் தள்ளச்செய்யவும் கற்றுக்கொண்டால் சுவரின் உதவி வேண்டுவதில்லை.

மேற்சொன்ன இரண்டு விஷயங்களையும் தெரிந்துகொண்டபின் எந்தச் சமயத்தில் எந்தவிடத்தில் நிற்க நேரிட்டாலும் சரி அவ்விடத்தில் மேற்சொன்ன மாதிரியே தாழ்வாய்க்கட்டையை உள்ளுக்கிழுத்துத் தலையை நிமிர்த்தி, புஜங்களைத் தளர்த்தித் தொங்கவிட்டு, வயிற்றின் தசைகளை உள்ளுக்கிழுத்து மார்பை முன்னுக்குத் தள்ளி நிற்கவேண்டும்.

## உட்காரும் பழக்கம்.

பூமிக்கு உயர்வான நாற்காலி முதலிய ஆசனங்களில் உட்கார்ந்தால் முன் சொல்லிய விதம் சரியான நிலையில் தேகத்தை நிமிர்த்தி, கால்களை உட்பக்க மிழுக்கவும்.

தரையிலாயினும், நாற்காலி, பெஞ்சு, ஸ்டூல் முதலியவைகளில் எதில் உட்கார்ந்தாலும் சரியாய் நிமிர்ந்த நிலையில் தேகமிருக்கவேண்டும்.

## நடக்கையில் பழக்கம்.

பக்ஷிகள் மிருகங்கள் தம்தம் தேக அமைப்புக்குத் தக்கபடி நன்ருய் நடக்கின்றன. மனிதர்கள்தான் சரியாய் நடப்பதில்லை. ஆதலால் நடக்கும்போது தேகத்தைச் சரியான நிலையில் நிமிர்த்தி, மெதுவாகவும் நன்ருகவும் சுவாசித்துக்கொண்டு ஒரே வேகத்தில் நடக்கவேண்டும். அப்போது இடுப்பை முன்பக்கம் வளைத்தும் குதிகால் பூமியில் படும் போது முழங்காலை நீட்டியும் கைகால்களை வீசியும் நடக்கவேண்டும். இவ்விதம் பழகிக்கொண்டால் வெகுதூரம் நடக்கலாம். சோர்வுண்டாகாது. தசை நார்கள் வலிவடையும்.

மேற்சொல்லியபடியே நிற்கும் பொழுதும், உட்கார்ந்திருக்கும் பொழுதும், நடக்கும்பொழுதும், ஓடும்பொழுதும் நிமிர்ந்த நிலையில் தேகமிருக்கவேண்டும். சில சமயங்களில் அந்நிலையை மறந்து உடலைத் தளரவிட்டு, முதுகை வளைத்துக்கொண்டிருக்கலாம். அச் சமயத்தில் அப்பியாசம் ஞாபகத்திற்கு வந்தால் அந்தக்ஷணமே நம் தேகத்தைச் சரியான நிலையில் கொண்டுவர வேண்டும். சிறிது காலம் கொஞ்சம் கஷ்டத்துடனும் ஞாபகத்துடனும் உன் உடலை நிமிர்ந்த நிலையிலிருக்கும்படி செய்தால் பிறகு அது நமக்கு இயற்கையாய்விடும். அதனுல் கிடைக்கும் பலன்கள் அளவிலாதன.

## படுக்கையில் அப்பியாசம்.

படுக்கைக்குப் போகும்போது ஜலோபாதையை நிவர்த்திசெய்துவிட்டு ஜனனேந்திரியத்தையும், முகம், கை, கால்களையும் குளிர்ந்த ஜலத்தால் நன்ருய்க் கழுவிக்கொண்டு தண்ணீர் குடித்துவிட்டுக் கொஞ்சநேரமிருந்து இடதுபக்கமாகப்படுத்து முதல் அப்பியாசத்தில் சொன்னபடி கடவுளைத் தியானித்து, சுவாசப் போக்கு வரவைக் கவனிக்கவேண்டும்.

## அப்பியாசங்கள்.

உட்கார்ந்து இடுப்புப் பக்க எலும்பின்மேல் பின்பக்கம் இரண்டு கைகளின் பெருவிரலும் முன்பக்கம் மற்றவிரல்களும் இருக்கும்படி ஊன்றிக்கொண்டு, பல்லை இறுக்கிக்கொள்ளாமல் வாயைமூடிக்கொண்டு மெதுவாய் மூச்சை மூக்கால் நிரம்ப இழுத்து மெதுவாய் வாயால் விடவும். பிராணயாமம் செய்வதற்கு இது உடம்பை நிமிர்ந்த நிலையில் இருக்கச்செய்யும்.

## நடக்கும்போது சுவாசித்தல்.

மெதுவாக் நடக்கும்போது நான்கு அல்லது ஐந்தடி நடக்கும் வரை மூச்சை இழுத்து, ஐந்தடி தூரம் அடக்கி ஐந்தடி தூரம் விடவும். இவைகளை நாளடைவில் அதிகப்படுத்திக் கொள்ளலாம்.

காற்றை இழுத்து அடைத்துக்கொண்டு வயிற்றை உள்ளுக் கிழுத்து வெளிக்குத் தள்ளுவதால் குடல் சம்பந்தமான நோய்கள் நீங்கும்.

தேகாப்பியாசத்திற்கும் மனப்பியாசத்திற்கும் நெருங்கிய சம்பந்த மிருக்கவேண்டும்.

தேகாப்பியாசத்தைப்பற்றிப் பலபேர் பலவிதமாக எழுதி யிருக்கிறார்கள். ஒவ்வொருவருடைய அப்பியாசத்தையும் விசேஷமாகத்தான் சொல்லுகிறார்கள். ஆனால் இவைகளில் நாம் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. தேகத்தின் தசை நார்களை மட்டும் பலப்படுத்திப் பெருக்கச்செய்து மனிதர்க்கு இயற்கையாகிய மிருகத்தன்மை மேலிடச் செய்யாம லிருக்கவேண்டும். எப்போதும் மனோசக்திக்குத் தேகசக்தி மீறினதாயிருக்கக்கூடாது. உலகத்தில் அரிய பெரிய காரியங்களைச் செய்தவர்கள் மனோசக்தியை உடையவர்களே; ஆகையால் நமது அப்பியாசம் தேகதிட்மும் மனோதிடமும் உண்டாகக் கூடியதா யிருக்கவேண்டும். மனோதிடம் மனோசாந்த மடைவதாலுண்டாக வேண்டும். மனம், இருதயத் துடிப்பாகிய நாடி நடை சுவாசநடை இவைகள் ஒன்றிற்கொன்று சம்பந்தமிருப்பதால், முன் சொன்னபடி மனோவாசி அப்பியாசம் அவசியமாயிருக்கிறது. சுவாசாப்பியாசங்களிலும் பல பிரிவுகளிருக்கின்றன. நமது முன்னோர்கள் காலை மாலை கடவுளை வணங்கும்போது நிலத்தில் பன்முறை விழுந்து, கைகளை நீட்டி வணங்குதல், காதைப் பிடித்துக்கொண்டு தோப்புகரணம் போடுதல், ஆலயம்சுற்றல், அங்கம் புரளுதல், ஆடுதல் பாடுதல் முதலியன அவற்றில் அடங்கும்.

சாதாரணமாகவோ கருவிகள் மூலமாகவோ செய்யும் தேகாப்பியாசங்க ளெல்லாம் மன அமைதியுடனிருந்து செய்யும் சுவாசாப்பியாசத்திற்கு இணையாகாதென்பது வெளியாகிறது. ஆகையினால் உடற்பழக்கத்துடன் சுகாதாரவிதிகளைக் கவனித்து ஒவ்வொருவரும் மேற்கண்டுள்ள நல்லமனப் பழக்கங்களையும் பழகி வருதலே நலமென்று தோன்றுகின்றது.

பண்டிட். S. S ஆனந்தம் பிள்ளை.

# செவ்வாய்.

(வெண்டாமரை கூ, இதழ் உ, 35 - ம் பக்கத் தொடர்ச்சி.)

செவ்வாயின் மேற்புறத்தில் உண்டாகும் மாற்றங்கள் மிக விஸ்தாரமானவைகளாயிருப்பதால் அவைகளை நாம் பூமியினின்று செவ்வனே பார்க்கக்கூடுமாயிருக்கின்றது. இந்தக் கிரகத்தின் இரண்டு துருவங்களையுஞ் சுற்றியுள்ள நிலங்களை உறைபனியானது ஒரு வெள்ளைக்குல்லாயைப்போல் மூடிக்கொண்டிருக்கின்றது. இவ் வெண்ணிற வெளிகள், பருவகாலங்களுக் கேற்பத் திட்டமாய் மிகுவதும் குறைவதும் இப்பூவுலகினர் கண்கூடாக் காணலாம். அவைகள் செவ்வாயின் கோடைக்காலத்தில் முழுவதும் மறைந்திருந்து, மாரிக்காலத்தில் திரும்பவும் புலப்படுகின்றன. லோவேல் எனப் பெயரிய வானசாஸ்திரி தனது சோதிட உப்பரிகையில் (Observatory) பருவங்களை யொட்டிச் செவ்வாயில் உண்டாகும் ஏனைய மாறுதல்களையும் கண்ணுற்று எழுதிவைத்திருக்கின்றார். மேலும் உவேல்ஸ் தேசத்தவராகிய டகௌாஸ் என்பவர் கொடிமரச்சோதிமண்டபத்தில் (Flagstaff Observatory) சில நிரீக்ஷணங்கள் செய்யுங்கால் செவ்வாயைச்சுற்றி ஆகாயம் இருப்பதாயும், அந்த ஆகாயம் பூமியின் ஆகாயத்தைவிட மென்மையும் நுண்மையு முள்ளதென்றும் கண்டுபிடித்துத் தெரிவித்திருக்கின்றார். கணித சாஸ்திர ஆராய்ச்சிகளாலும் இவ்வுண்மை உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

மேலும், செவ்வாயினது வாயுமண்டலத்தின் நுண்மை காரணமாக, அக் கிரகத்தைச்சுற்றி அதிக மேகங்கள் இல்லையென்றும், அதில் வசிப்பவர்கள் சீதோஷ்ணங்களா லுண்டாகும் கஷ்டங்களை யறியாத அதிர்ஷ்டசாலிகளென்றும் நினைக்க இடமுண்டாகின்றது. அங்குப் புயலும் சாந்தமாகவே அடிக்கும். மழை, பனி, கல்மழை முதலியனவும் மிக அருமையாய்த்தான் பெய்யும். ஆகையாற்றான் அதில் அவ்வளவு கால்வாய்களும் இங்குமங்கும் சில செழிப்பு நிலங்களும் இருக்கின்றன. தண்ணீரும் அங்கு அதிசீக்கிரத்தில் கொதிக்கும்.

இப்பொழுது செவ்வாயில் காற்று இருக்கிறதென்று தெரிந்துகொண்டோம். இனி அதில் நீர் உண்டா என விசாரிப்போம். இவ்விஷயத்தை ஒருவாறு தெரிந்துகொள்ள நாம் துருவத் தொப்பியை உற்றறியவேண்டும். அத் தொப்பி, காலங்கள் தவறாது விருத்தியும் க்ஷயமும் அடைகிறதென்று முந்தியே சொல்லியிருக்கிறோம். கோடைக் காலத்தில் அது குறையும்போது, இவ்வெள்ளைத் துண்டைச்சுற்றி, சீதோஷ்ண

ஸ்திதிக்கும் தொப்பியின் பரிமாணத்திற்கும் தக்கவாறு மாறுதலடையும் ஓர் மங்கிய பச்சைநிறமுள்ள வரி காணப்படுகின்றது. பிக்கனிங் எனும் பிரிட்டிஷ் சாஸ்திரி இப்படி மாறும் வரி தண்ணீர் என்றும், கோடைக் காலத்தில் துருவத்தொப்பியின் மத்தியில் 250 மைல் நீளமும் 150 மைல் அகலமுமுள்ள ஓர் நீர்நிலை இருப்பதாகவும் கண்டுபிடித்திருக்கிறார். செவ்வாயில் இந்தத் துருவத் தொப்பிக் கடல்களைத்தவிர வேறு பெரிய நீர்நிலைகளிருக்கும் சின்னங்கள் யாதொன்றும் புலப்படவில்லை. மழை அரிதாயும் தண்ணீர் குறைச்சலாயுமிருப்பதால், செவ்வாயில் ஜனங்கள் இருக்கும்பக்ஷத்தில் அவர்கள் பயிர் செய்வதற்கு ஆற்றுப் பாய்ச்சலையே எதிர்பார்க்கவேண்டும். ஆகவே அவர்கள் கால்வாய்கள் வெட்டியே தீர வேண்டும். செவ்வாயை ஒரு நல்ல தூரதிருஷ்டிக் கண்ணாடியைக் கொண்டு உற்று நோக்கினுல் அதன் மேற்புறமுழுவதும் கரிய நேர்கோடுகள் வரிசை வரிசையாய் ஒன்ருெடொன்று பின்னிக் குறுக்கிடுவதைக் காணலாம். இது ஓர் அற்புத சம்பாதமன்ருே!

(தொடரும்.)

சு. சுவாமிநாத தீக்ஷிதர், B. A., L. T.,
புதுவை.

---

## கோவூர்க் கிழார்.

(வெண்டாமரை சு, இதழ் உ, 38-ம் பக்கத் தொடர்ச்சி.)

### காரிமக்கள் உயிர்மீட்டது.

மற்ெருருசமயம், சேரநாட்டின் கருவூரில் அரசாண்ட சேரனெருவன், கிள்ளிவளவனது புய வலிமையையும், போர்த்திறத்தையும் செவ்வனே அறிந்திருந்தும் தனது மடமையால், அச்சோழனைப் பகைத்துப் போர்தொடுக்க, சேதி நாட்டின்கண்ணதாகிய திருக்கோவலூர்க் காரிமன்னன் துணைபெற்றுச் சமர்புரிந்தபோது, வளவனின் வில்லாண்மைக் காற்ருது சேரன் உயிரிழந்தான். காரி புறமுதுகிட்டோடினுன். இச்சந்தர்ப்பத்தில் யுத்தகளத்தில் பால் மணமருத காரிவள்ளலின் இளவல்களிருவரும் சோழன்கிள்ளிபால் பட்டனர். அம் மைந்தர்களிருவரையும் வேந்தன் கைப்பற்றி, காரி மதியாது சேரனுக்குத் துணையாய் வந்து தன்னுடன் எதிரிட்டுப் போர்புரிந்த செயலுக்கு மிகுதியுஞ் சினங்கொண்டு அதற்கீடாக அவனிருமக்களையும் யானைக்காலில் இடறிக் கொல்வித்துத் தனது சினந்தணிப்பதென்று கருதி, பாலர்களிருவரையும்

கொலைஞர்வசம் சேர்த்தனன். இக் கொடுஞ் செயலைக் கேட்டுச் சகியாத கோவூர்க்கிழார் அரிதில் ஆங்கடைந்து கிள்ளியைநோக்கி, “அரசே! நீ புறுவொன்றின் துக்கமட்டுமேயன்றி மற்றும் உயிர்கட்கு நேர்ந்த துன்பங்கள் பலவற்றையும் தீர்த்த சோழரது மரபிலுதித்தவன், இச்சிசுக்களோ, அறிவாலுழுதுண்ணும் புலவரது வறுமையைக்கண்டஞ்சித் தம்முடைய பொருளைப் பகுத்துண்ணும் குளிர்ந்த நிழலை யுடையராய் வாழ்வாருடைய வமிசத்துதித்தவர்கள். இப்பொழுது இந்த யானையைக்கண்டு தம் மிளமையால் இயற்கையில் வெருவியழுகின்ற அழுகையையும் மறந்து நிற்கும் மிகச்சிறுபிள்ளைகள். இவர்கள், இக் கூட்டத்தை அச்சத்துடன் பார்த்து முன்பு தாங்கள் அறிந்திராத புதிய வருத்தமுடையவரா யிருக்கிறார்கள். எதுமறியாத இவ்விளம்பிள்ளைகளது சிறுமையையும், உனது பெருமையையும் நான் காட்டிவிட்டேன். நான்கூறிய இவ் வார்த்தைகளை நீ உள்ளபடி கேட்டவனானால் இனி நீ விரும்பியதைச் செய்க”. என்னுங் கருத்துத்தோன்ற:—

“நீயே, புறவி னல்ல லன்றியும் பிறவும்
பலவும் விடுத்தோன் மருகனை யிவரே
புலனுழு துண்மார் புன்க ணஞ்சித்
தமதுபகுத் துண்ணுந் தண்ணிழல் வாழ்நர்
களிறு கண்டழூஉ மழாஅன் மறந்த
புன்றலைச் சிறாஅர் மன்றுமருண்டு நோக்கி
விருந்திற் புன்கணோ வுடையர்
கேட்டனை யாயினீ வேட்டது செய்ம்மே.” (46)

என்னும் பாடலைக் கூறினர்.

மிகவும் இரங்கத்தக்க அப்பரிவுறு சொற்கள் வளவனது மனதில் பசுமரத்தாணி யென்னப் பதிந்து அவன் கொண்டிருந்த கடுஞ்சினத்தை அறவே யகற்றிக் கருணைபொங்கச்செய்து அவ்விளமக்களைக் கொலையினின்றும் விடுவிக்கும்படிசெய்தன. என்னே! புலவர்தம்பெருங்கருணை!

அக்காலத்தரசர்க்குப் புலவர்பாலிருந்த அபிமானமும், மதிப்பும் எத்தகைய மேலானதாக விருக்கின்றன! இங்ஙனம் புலவர்களது அருமை பெருமைகளை அறிந்து தவறாமல் ஆதரிக்கவல்ல கருணைத்தமிழ் வள்ளல்கள் பலர் அக்காலத்திருந்த செருக்காலன்றோ இவ்வாறு முற்காலத்துப் புலவர்கள் மாட்சிமை பெற்றவராயினர்! இத்தகைய செல்வாக்கு அதற்குப்பிந்திய காலங்களில் அநேகமாக மாறி இந்நாளில் முற்றுஞ் சிதைந்துவிட்டதென்னலாம். அக்காலத்திருந்த புலவர் பெருமக்களைப் போல்

வார் இக்காலத்திலரென்று சிலர் சொல்லக்கூடும். தமிழருமை யறிந்து ஆதரிக்கும் வள்ளல்கள் அருகிவிட்டதுதான் தமிழில் புலமை குன்றி விட்டதற்குக் காரணமேயன்றி வேறன்று. கல்வி முதலியவற்றின் செழிப்பு ஆதரிப்பவர் மிகுதியால் உண்டாவதேயன்றிப் பிறிதில்லை.

இதுகாறுங் கூறியவாற்றால் கோவூர்க்கிழாரின் பெருந்தன்மையும்,ஜீவகாருண்யமும்,வேந்தர்பால் அவர்க்கிருந்த செல்வாக்கும், நன்மதிப்பும், அரசர் நீதிதவறிய காலையில் அவர் திருந்துதற்கு இடித்துரைக்கும் இனியமொழியும் மனவுறுதியும், ஆபத்துக் காலத்திலும் மனஞ்சலியாது முயன்றுமுடிக்கும் காரியத்தின் அரியசெயலும், இயற்கை நலங்களை அவ்வப்படியே தமது செய்யுள்களிலமைத்து ஓசை குன்றாது இனிய பொருள்தந்து மனங்கனியப் பாடும் புலமை ஆற்றலும் வெளியாயின. இவை அறிஞரெல்லாம் அறிந்து மகிழத்தக்கன வன்றோ! இத்தகைய திப்பியப்புலவர் விளங்கிக் கீர்த்திபெற்றது நம் தமிழகமெனின் அதற்கு வேறோர் பெருமையும் அதிகமாகச் சொல்ல வேண்டுமோ? சுபம்.

சி. கு. நாராயணசாமி முதலியார்,
கோயமுத்தூர்.

---

# மூவாதியார் அருளிச் செய்த ஐந்திணை யெழுபது.

## முன்னுரை.

சில மாதங்களுக்கு முன்பு பழைய தமிழ்நூல்களைப் பார்வையிட வேண்டுமென்ற ஆசையினால் சென்னையில் உள்ள கையெழுத்துப் பிரதிச்சாலைக்குச் சென்றிருந்தபொழுது, "ஐந்திணை யெழுபது" என்னும் பெயரிய புத்தகத்தைக் கண்ணுற்றேன். கண்டதும் ஆங்கிருந்தே அதன் பிரதி ஒன்றைச் சித்தஞ்செய்தேன். பின்னர், எப்பொழுதாவது இந்த அருமையான நூல் வெளிவந்துள்ளதா என்பதாக விசாரித்ததில், ஏதோ முப்பது வருஷங்களுக்கு முன் திருநெல்வேலியில் உரையில்லாமல் இது பிரசுரிக்கப் பட்டதாகவும் அதுவும் இப்பொழுது கிடைப்பது அரிதெனவும் என் நண்பர் ஒருவர் எனக்குச் சொன்னார். இந்தச் செய்தியை எனக்குத் தெரிவித்த அன்பர் என்னையே எளிய நடையில் ஒரு உரை எழுதிப் பதிப்பிக்கும்படி வேண்டியதால் இதனைக் "கலைமகள்" வாயிலாக முதலில் வெளியிடத் துணிந்தேன். நிற்க,

ஐந்திணை யெழுபது என்னும் இந்த அழகிய நூல் "பதினெண் கீழ்க்கணக்கு" என்னும் பதினெட்டு நூல்களுள் ஒன்றாகும். இது அப்பொழுது வளர்ந்த சங்கப் புலவர்களது நன்மதிப்பையும், வெளிவந்து உலவுதற்கு வேண்டிய அனுமதியையும் பெற்றிருந்தது. மூவாதியார் என்ற புலவரால் ஆக்கப்பட்டது. ஐந்து திணைகளையும் பற்றிக் கூறும் எழுபது பாட்டுகளால் ஆகியது.

இந்த நூலில் வரும் பாட்டுகள் மிகவும் சுவை பொருந்தியவை. நடை வெகு அழகாக அமைந்துள்ளது. தெரிவிக்கும் செய்திகள் அற்புதமானவை. சுவை பழுத்து ஒழுகும் இந்த ஐந்து திணைகளுக்கு உரிய எழுபது பாட்டுக்களில் ஒவ்வொன்றிலும் அழகு ததும்பி நிற்பதாகவே தோன்றும். உண்மையில் இதன் பாட்டுகள் யாவும் ஆச்சரியகரமான கற்பனு சக்தி வாய்ந்தவையே.

இந்த அருமையான நூல் முழுவதும் எனக்குக் கிடைக்கவில்லை; இதன் பாட்டுகள் எழுபதனுள் 25, 26, 69, 70, எண்ணிக்கையுள்ள பாக்கள் முழுமையும், 13 வது பாட்டின் முதலிரண்டு அடிகளும் குறைந்துள்ளன. 24 வது பாட்டின் உரையிலும் சிறுபாகம் குறைந்துள்ளது நோக்க, இது ஏடு மட்கி மடிந்ததாலுண்டான குறை யென்றும், பழைய பிரதிகளில் இவை கிடைக்கக்கூடும் என்றும் உறுதி எனக்கு உண்டாகிறது. வைத்திருப்பவர்கள் எனக்கு அவற்றை அனுப்பினுல், தமிழகத்து நூல் ஒன்றை உரு அழியாது வெளிப்படுத்தும் புண்ணியத்தைப் பெறுபவர் ஆவார்கள்.

மற்றொரு சிறு விஷயம். நான் ஏடுத்த பிரதியில் முதல் 24 பாட்டுகளுக்குப் பழைய உரை ஒன்று உண்டு. ஆனுல் அது இக்காலத்திற்கேற்ற எளியநடையில் இல்லை என்று என் நண்பர் கூறியதாலும், அதுவும் முற்றுமில்லை யாதலாலும், புதிய உரை ஒன்று எனது சிற்றறிவைக்கொண்டு வரையப் புகுந்தேன். பிழையைத் திருத்துதல் பெரியோர் கடனுல்.

இனி "ஐந்திணை யெழுபது" என்பது இன்னதென்று சிறிது விளக்கிவிட்டுப் பின்னர் நூல் ஆரம்பிப்பேன்.

ஐந்திணை யெழுபது என்பது அகப்பகுதிக்குரிய நூல்களுள் ஒன்று. அகமாவது ஒத்த அன்பு அல்லது காதல் உடைய ஆண் பெண் என்னும் இருதிறத்தாருக்கு இடையில் ஒழுக்க வழக்க முறைகளால் ஏறும் காதல் வளர்ச்சியையும், அதனைச்சார்ந்த மற்றையசெய்திகளையும் எடுத்துக் கூறும் இலக்கியப் பகுதியினுள் ஒன்று. இதில் ஆண்மகனைத்

தலைவன் தலைமகன் என்றும், பெண்மகளைத் தலைவி தலைமகள் என்றும் வழங்குவர். இவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்யவும், இவர்களைச் சேர்த்து வைக்கவும், செய்தி தெரிவிக்கவும், உற்ற தோழி ஒருத்தி உண்டு. இந்த மூன்று பேரும் ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ளும் முறையிலும், இதைப்பற்றித் தாய், நண்பர், மகளிர் முதலியவர்கள் பேசும் வகையிலும் அகத்திற்கு உரிய பாட்டுகள் அமைக்கப்படும்.

இனி, அப்பாட்டுகளில் வழங்கும் திணை துறை முதலியவற்றைத் தெரிந்து கொள்வதற்கு நாம் பழையகாலத்தில் வழக்கத்தில் இருந்த காதல் முறையைப்பற்றிக் கவனித்தல் அவசியம். முற்காலத்தில் பெண்கள் தங்கள் விருப்பின்படியே கலியாணம் செய்துகொண்டனர். அப்போது பெண்மக்கள் பன்னிரண்டு வயதிலும் ஆண்மக்கள் பதினாறுவயதிலும் மணஞ்செய்துகொள்வதற்கு உரியவர்கள் எனக் கருதினார்கள்.

நிற்க, இவ்விருவரும் தனிமையில் ஒரு குளத்தின் அருகிலோ அல்லது ஒரு சோலையிலோ ஒருவரை யொருவர் எதிர்ப்பட்டுத் தெய்வ சங்கற்பத்தால் காதல் கொள்ளுவர். பின்னர்ச் சிலநாள் அவர்கள் "பல்காற் காண்டலும் உள்ளத்திற் கினிதே" என்ற வாறாக, ஒருவரையொருவர் காணவேண்டும் என்ற ஆசையை யுடையவர்களாய் முதலில் தாம் சந்தித்த இடமாகிய குளக்கரைக்கோ அல்லது சோலைக்கோ அடிக்கடி போவார்கள். இப்படியாகக் காதல் முதிர்ச்சி பெறவே காந்தருவ மண முறைப்படி கலந்து ஒழுகுவர். இதனையே பின்வரும் குறுந்தொகைப் பாட்டு குறிக்கும்.

"யாயும் யாயும் யாரா கியரோ ?
எந்தையு நுந்தையு மெம்முறை கேளிர் ?
யானு நீயு மெவ்வழி யறிதும் ?
செம்புலப் பெய்ந்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே !"

இது காதற் சிறப்பினைப் பற்றித் தலைமகன் தலைவிக்குக் கூறியது. "பெண் அரசே! என் தாயும் உன் தாயும் யார்—ஒருவரை ஒருவர் அறிவரோ ? என் தந்தையாரும் உன் தந்தையாரும் தான் என்ன—எவ்வகை நட்பினர் ? நான் உன்னைத்தான் முன்பின் கண்டு அறிவேனோ ? செந்நிலத்திற் பெய்யும் மழைபோல அன்புள்ள நம்மிருவர் மனமும் ஒன்றுகூடின காண் !" இது பெரியார், சுற்றத்தார் அறியாது நடைபெறுவது ஆதலால் களவியல் என்றும் களவொழுக்கம் என்றும் பெயர் பெறும்.

சில நாட்களில் இக் களவொழுக்கம் தலைவியின் நடை வேறு பாட்டினாலும், மற்றும் பலகுறிகளாலும், ஊராருக்குத் தெரிந்து விடும். அவர்கள் இதைப்பற்றிக் கூட்டங்கூடிப் பேசுவர். ஊரில் எங்கும் இதே முழக்கமாக இருக்கும். இதற்கு அலர் அல்லது கௌவை என்று பெயர்.

ஊரில் அலர் உண்டாகவே இனி அவ்வகையான பேச்சுக்கு இடங் கொடுத்தல் ஆகாது என்ற எண்ணத்துடன் தலைவன் தலைமகளைவிட்டுப் பிரிந்து வேறு ஊருக்குச் சென்றிடுவான். அப்பொழுது தலைவி,

"மண்ணுள் மேனியும் உண்ணுள் அமுதும்
நண்ணுள் ஊசலும் எண்ணுள் பந்தும்
முடியாள் குழலும் படியாள் இசையும்
தடவாள் யாழும் நடவாள் பொழிலும்
அணியாள் பணியும் பணியாள் ஏவலும்
மறந்தாள் கிளியும் துறந்தாள் அன்னமும்
தூங்குவள் போன்றே ஏங்குவள் எளியை
நோக்குவள் போன்றே நோக்குவள் வெளியை
கேட்டுங் கேட்கிலள் பார்த்தும் பார்க்கிலள்
மீட்டுங் கேட்பள் மீட்டும் பார்ப்பள்
தனியே யிருப்பள் தனியே சிரிப்பள்
விழிநீர் பொழிவள் மெய்விதிர்த் தழுவள்."

(மனோன்மணீயம்)

இவ்வாறாகப் பெரிதும் வருந்தி நிற்பள். தான் முன்னாட்களில் அனுபவித்ததை யெல்லாம் கூறி முறையிடுவள்.

(தொடரும்)

ரா. வாசுதேவ சர்மா,
புதுவை.

---

## புகழேந்தி.

(வெண்டாமரை ௬, இதழ் ௨, 42-ம் பக்கத் தொடர்ச்சி.)

பிறகு குலோத்துங்கனிடம் சென்று, "குலோத்துங்க ! உன்னுடைய மனைவியோடும் வந்தானே ஒருவன், அவனைக்கண்டனையா ?" என, அவன், "கண்டேன், இன்று யானை முறித்தோடியபோது உம்முடன் பாடினரே அவர்தானே" என்றான். ஒட்டக்கூத்தர், "ஆம். அப்

பாவிதான். பாண்டியனவை வித்துவானாய் இருந்தான். உண்மையிற் புலவனல்ல. அங்கு நான் சோழர்பெருமைகளைக் கூறியகாலத்து மறுத்துரைத்தான். அன்றி இச்சோணாட்டில் வந்து, நான் உனைப் புகழ்ந்தால் அவன் அதற்கு மாறாகப் பாண்டியனைப் புகழ்ந்தனன் கண்டனையா?" எனக் கோள் சொல்லினன். பிறகு தான் இட்டதே சட்டமாகலின் அரசனுத்தரவை எதிர்பாராது புகழேந்தியைச் சிறைப்படுத்தினன். இதனைப் பாண்டியன் மகள் அறியாள்.

அவ்வாறு புகழேந்தியார் சிறையிலிருக்கையில், இதுவும் ஊழ்வினைப்பய னென் றெண்ணி, மாதவனை மறவாமல் மனவெளியி னினைத்திருந்த ஏதமொழித் தருள்கூறென் றிரந்து சின்னாளிருந்தாரே. அங்கிருந்துகொண்டு அப் பக்கம்போகும் பெண்களுக்காகப் பாரதத்திலுள்ள சில கதைகளை அகவற்பாவில் மிகச் செவ்விய நடையிலெழுதி அவர்களுக்குத் தந்தார். அவர்கள் இவர் புலமையை வியந்து அவர்க்குவேண்டிய காய் கறி முதலியனவற்றைத் தினமானம் கொணர்ந்து தர, அதனைப்பெற்று அவைகளைச் சமைத்து உண்டு, மிகுதியைக் காவலாளர்க்குக் கொடுத்து வந்தார். அவர்கள் இவர்மேல் அன்புகொண்டு அவர்க்கு அடங்கி வந்தனர். இது கர்னபரம்பரையா லறியப்படுவது.

இவ்வாறு துளுவ வேளாள குல தீயமாகிய புகழேந்தியார் சிறையில் வாணாளைப் போக்கி வருகையில், ஓர் நாள் குலோத்துங்கன் யானையேறிக் கூத்தனோடு பவனி வந்தனன். பவனிகாணப் புலவர் மேல்மாடியை யடைந்தார். பவனி சிறைச்சாலை யிருக்குந் தெரு வழியாகப் போயிற்று. இவரைக் கண்ட குலோத்துங்கன், கூத்தனை அழைத்துப் புகழேந்தியாரைச் சுட்டி, "ஐய! அதோ அம்மாடியில் உலவும் புலவர் செந்தமிழிற் சிறந்த புலமை வாய்ந்தவரல்லவா" எனக்கேட்டான். ஒட்டக்கூத்தன், "என்னை? அவனென்ன பித்தன்! அவனு மோர் புலவனோ? வாயில் வந்தவாறெலாம் உளறும் உன்மத்தன்" என்றிகழ்ந்தனன். இதனைச் செவியேற்ற புகழேந்தியார்,

சத்தம் பயிலும் புலவோர் கதலித்தண் டோட்டம்புகும்
பித்த னிவனென்ப ரென்னைக்கண் டாற்பெருந் துப்பனைத்துத்
தத்தம் பிறகிடும் பார்வேந்தர் தங்கள் தடமகுட
சத்த மபசத்தங் காண்கங்குல் யானைச் சயதுங்கனே.

என அவன் கூறியதனை மறுத்துரைத்தார்.

ஒட்டக்கூத்தன் வெகுண்டு தன்பெருமையை நாட்டவும், புகழேந்தியின் பெரும் புகழினை ஓட்டவும் தன்னினும் அவர் இழிந்தார் என்பதைக் காட்டவும்,

மானிற்கு மோவிந்த வாளரி வேங்கைமுன் வற்றிச்செத்த
கானிற்கு மோவிவ் வெரியுந் தழன்முன் கனைகடலின்
மீனிற்கு மோவிந்த வெங்கண் சுறாமுனம் வீசுபனி
தானிற்கு மோவிக் கதிரவன் றோற்றத்தில் தார்மன்னனே.

என்னும் பாடலைப் புனைவிலி புகழ்ச்சி யணியாகப் பாடினர்.

அவ்வாறெல்லாம் ஓடிவிடுமோ நமது புலவர் பெருமான் புகழ்! அப்புலவர் "அரசே யாம் அப் பாடலினை ஒட்டிப் பாடுதுமோ? வெட்டிப் பாடுதுமோ?" என, அரசன் "ஒட்டியே பாடும்" என்றார். அதன் மேல் ஆசுகவி வல்ல அருந் தமிழ்ப்புலவர்,

மானவ னுனந்த வாளரி வேங்கைமுன் வற்றிச்செத்த
கானவ னுனவ் வெரியுந் தழன்முன் கனைகடலின்
மீனவ னுனந்த வெங்கண் சுறாமுனம் வீசுபனி
தானவ னுனக் கதிரவன் றோற்றநந் தார்மன்னனே.

என்ற பாடலைப் பாடினர். உடனே குலோத்துங்கன் அவர்பால் பேரபிமானம் கொண்டனன். சிறை நீக்கியிருப்பன். அந்தோ! அவன் என் செய்வன்! தனது குரவர்க்குத் தீது செய்வது உலகில் அடுக்குமோ? ஆகவே புகழேந்தியார் சிறையினி லிருப்பதைக் கவனித்திருந்தும் கவனியாதவன் போல் போயினன்.

ஒட்டக் கூத்தன் தன்முன் ஒருவன் புலவன் என வருதல் அடாதென எண்ணி யிருந்தனன். அவன், குலோத்துங்கன் அரசாட்சியினில் முதல் நிலைமை வகித்திருந்ததால் தான் இட்டதே சட்டமாயிருந்தது.

அரசன் தமிழ் கற்றவன் என்பதும், அவன் பல வித்துவான்களைப் போஷிப்பவன் என்பதும் தமிழ் நாட்டில் பிரசித்தம். ஆகவே, அவனிடம் பரிசு பெறப் புலவர்கள் பலர் வருவது வழக்கம். ஒட்டக் கூத்தன் சமஸ்தான வித்துவானும் சோழனது உபாத்தியாயருமாய் இருந்ததால் அப்புலவர்களைப் பரீட்சிக்கக் கூத்தனே நியமிக்கப்பட்டான். இவனே அப்புலவர்களைச் சிறையிலிடுவன். வருடந்தோறும் நவராத்திரி பூசை செய்வது அரசர்க்கு வழக்கன்றோ. அதிற் கடைநாளில் துர்க்கைக்குப் பலியிடுவது வழக்கம். அன்று கூத்தன் அப் புலவர்களை வரவழைத்து ஒருவன் சிகையொடு மற்றையவன் சிகையினை முடியிட்டு

இரட்டைக்கடா வெட்டுவது போன்று மனதில் சிறிது கருணையுமின்றி வெட்டுவன். அவன் பொய்ப்புலமை யுடையோரெல்லாம் கவிபாட ஆரம்பித்துத் தமிழினிலையினைத் தாழ்த்தாதிருக்க வெட்டினன் போலும்! இதனால் இவனை யாவரும் வெறுத்தனர். இதனைக் காளிமுத்தம்மை, (படிக்காசுத்தம்பிரான் என்பார் சிலர்)

குட்டுதற்கோ பிள்ளைப்பாண் டியனிங் கில்லை
குறும்பியள வாக்காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லி யில்லை
இரண்டொன்றா முடிந்துதலை யிறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்த னில்லை
விளையாட்டாக் கவிதைதனை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ வறிவில்லாத் துரைக ளுண்டு
தேசமெங்கும் புலவ ரெனத் திரிய லாமே.

எனக்கழறுவதான் உணரலாம்.

இவன் இவ்வாறு செய்து வருவதை யறிந்த சோ பாண்டியர், குலோத்துங்கனுக்கு அங்ஙனம் செய்தல் அழகல்ல என ஓலை விடுத்தனர். கூத்தன் அவ்வோலையினைக் கண்டு குலோத்துங்கனிடம்,

அன்றையினு மின்றைக் ககன்றதோ வல்லாது
குன்றெடுத்து நீதிருத்திக் கொண்டாயோ — என்றும்
அடைந்தாரைத் தாங்கு மகளங்கா நீயும்
நடந்தாயோ நாலடி.

என்றனர்.

புகழேந்தியார் சிறையிலிருந்தபோது பல புலவர்கள் வந்தார்கள். கூத்தன் அவர்களைச் சிறையி லடைத்தான். இவர்களைக்கண்ட புகழேந்தியார் அவர்கள்பால் கருணைகூர்ந்து அவர்களில் நுண்ணறிவுடைய ஐவரைத் தேர்ந்தெடுத்தார். அவர்களுள் ஒருவன் வேளாளன். மற்றையவர் கொல்லனும் குலாலனும் தச்சனும் தட்டானும் ஆவர். அவர்களுக்குக் கல்வி பயில்வித்துப் புலவராக்கினர். இத்தகையரல்லரோ புலவர்!

(வரும்)

தேன்பட்டினம் - மீனாக்ஷிசுந்தரன்.

# திராவிடர் வைத்திய நூலாராய்ச்சி.

(வெண்டாமரை ௬, இதழ் ௨, 44-ம் பக்கத்தொடர்ச்சி.)

யூகிமாமுனிவர் வைத்திய சிந்தாமணி தத்துவவிதியின் ஓர் விருத்தம்.

"பார்க்கவே சடந்தான் சென்மிக்கு மாறு – பகர் சுக்ல சுரோணி தத்தி னேடேகூடி, மூர்க்க பவளப்பையின் முத்துதிர்ந்தாற் போல, முனையறுகு நுனிபனிப்போற் சுரோணிதத்திற்சேர்ந்து, தாக்கச் சுரோணிதந் திரண்டுதன் ரூபமாகி............"

மேல்நாட்டார் சிசு உற்பத்தி சாத்திரத்தின் மொழிபெயர்ப்பு. (Precis élementaire d'anatomie, de physiologie par P. Rudaux Notions d'embryologie Page 710.) சுக்கிலம் சுரோணிதத்தோ டெதிர்ப் படும்போது, சுக்கிலத்தின் தலை உதிர்ந்து சுரோணிதத்தில் கலக்கின்றது. சுக்கிலமும் சுரோணிதமும் ஒன்றுக்கொன்று ஐக்கியமாகிவிடுகின்றன. அதுமுதல் கருவுதிக்க ஆரம்பம்.

யூகிமாமுனிவர், வைத்தியசிந்தாமணியால் கரு உற்பத்தியாகும் 5-ம் நாள் முதல் கர்ப்ப முடிவுவரையில் பிண்டத்தையும், சிசுவையும் சோதனை செய்திருக்கிறார் எனத் தெரிகிறது.

"......இளக்குகின்ற ஸ்வந்தாநாள் கருப்போலாகும் ஈரைந்தா நாள்தனிலே திரளும்பாரு,.................முதற்றிங்கள் கம்பமாய் முனை போலாமே"

ஆமேரண்டாந்திங்க டலைமுதுகு தோன்றும், அடுத்தமூன்றாந் திங்க ளரைவிரல் கைகாலாம், நாமேநாலாந்திங்கள் செவிநாவுகண்டும், வாமேயாறாந்திங்க ணகங்களாகும், மருவியவேழாந்திங்கண் மயிரெலும்பு நரம்பாம்."

மேல்நாட்டுச் சாஸ்திரிகளாகிய போனீஸூம் புஷர்நும் எழுதிய அங்கவிவரமும், சிசு உற்பத்தி விவரமும் அடங்கிய நூலில் இருப்பதின் மொழி பெயர்ப்பு: (Nouveaux éléments d'anatomie descriptive et d'embryologie par H. Beaunis et A. Bouchard) மூன்றாம்வாரத்தில் பிண்டம் 5-மில்லி மேத்தர் அளவுடையது. ஆறாம்வாரத்தில் முதுகு கீறல், 9-வது வாரம் கைகால் எலும்பு தோற்றம், மூன்றாமாதம் நாசி எலும்பு உற்பத்தி, ஐந்தாமாதம் காது உள்ளெலும்பு வருதல், நாக்கு அடிப்பக்கம் உண்டாதல், ஆறாமாதம் நகங்கள் தோலினின்று வெளி

வருதல், உரோமம் 5 - மாதத்தில் சிரசில் அதிநுட்பமாகத் தோன்றி, அதில் சில கர்ப்பத்துக்குள்ளேயே விழுந்து பிறகு முளைக்கிறது. (யூகி மாமுனிவர் வலுத்தமயிர் தோற்றியபிறகு கணக்கெடுத்தாரென் றெண்ண வேண்டும்.)

நாம்பைப்பற்றிய விஷயங்களுக்கு இன்னம் விசேஷ ஆராய்ச்சி வேண்டும். மேற்சொன்னவைகள் பிராஞ்சு ஆயுர்வேத பண்டிதர்கள் எழுதியுள்ள விபரங்கள்.

தமிழ்ப்பண்டிதர்கள் கர்ப்பம் பத்துத்திங்கள் என்கிறபடியாலும் மேல்நாட்டார் 9-மாதத்தில் முடிவென்பதாலும் திங்கள்முதலிய கணக்கு இத்தனைநாளெனச் சரியாக அறியக்கூடாமைபற்றி முற்றும் ஒப்பிட்டுச் சொல்லக்கூடுமாயில்லை. மாதக் கணக்குகள் எங்ஙனமிருப்பினும் வழு வில்லை. யூகிமாமுனிவர் சிசு உற்பத்தியைக் கண்ணுற்று இருப்பதாகத் தெரிகிறதே ஓர் விசேடம். இதன்றியும் வல்லாதி நாடியில் மனிதவளர்ச் சியைப்பற்றிச் சொல்லுவது:

"......எனடா............இருபதுதானுமட்டும் வளரும் பிள்ளை, நானடா வொளிபோகும் முப்பத்திரண்டில், நாற்பதுக்கு ளழகுபோம்."

போனிஸ் - புஷார் நூலின் மொழிபெயர்ப்பு. 25 - வயதுக்குள் மனிதனுக்கு உயரவளர்ச்சி முடிவாகக் காணப்படுகிறது. 50 - வயது முதல் உருவம் பங்கப்படுகிறது. யூகிமாமுனிவர் மனிதன் ஒருநாள் ஒன் றுக்கு விடும் சுவாசத்தையும் எண்ணியிருக்கிறார்.

"நாளொன்றுக் கிருபத்தோராயிரத் தறுநூறு நலமான சுவாசந்தா னெழுந்திருக்கும்......"

மேல்நாட்டார் கணக்குப்பிரகாரம் ஒரு சுகபுருஷன் 1 - நிமிஷத் துக்கு 14 - அல்லது 15 - தரம் சுவாசிக்கிறான் ஆக:

15 சு X 60 நி X 24 ம = 21600 - சுவாசம். இதன்றியும் அங்க விவரச் சோதனையைப் பண்டைநாள் மருத்துவர்கள் அதி சிரத்தையுடன் செய்திருக்கின்றனர். அவர்கள் உரோமத்துவாரங்களையும், சலத்துவா ரங்களையும் எண்ணி யிருக்கின்றனர்.

"நலத்தமூன்றரைகோடி யுரோமத்துவாரம்,......மூலத்த முப்பத் தெண்கோடி சலத்துவாரம்......" (யூகிமாமுனிவர்)

சவச்சோதனையும் செய்திருக்கின்றனர்: நந்தேகத்திலுள்ள உதிர அளவை யும், மாமிசம், மூளை, தோல், கண், நாக்கு, எலும்பு இவைகளின் நிறை யையும், குடலின் நீளத்தையும் அறிந்துள்ளார். தன்வந்திரி நாடி,

"எண்ணு முப்பலமேழிளை யினிச்சிறு குடலினீள முண்ணுமுப் பத்திரண்டு முழமென ... ... ..."

மேல்நிறைகளைத் தற்போது நிறைகளுக்கு இசையக் கணக்கிடக் கூடுமாயில்லை. ஒவ்வொரு ஊருக்கும் படி — தூக்கு முதலியவை வித்தியாசப் படுகிறதாயின் முந்நாட் பலம், முழம், கழஞ்சி இவைகளுக்கும் நிகழ்காலநிறை அளவுகளுக்கும் வித்தியாசமிருப்பது நூதனமல்ல.

நாடி ஒன்றைமாத்திரம் பார்த்து வைத்தியன் வியாதியின் விபரமறியவேண்டுமென்றும், அவ்வித வழி தமிழ்வைத்தியத்தில் இருக்கிறதென்றும் சிலர் சொல்லக்கேட்டிருக்கிறோம். அது சுத்த தவறு.

நாடிநடை தேகக்கூறுக்கு முக்கியபீடமாக இருப்பது உண்மையே. ஆகிலும் அதனுடன் சில உபகுறிகளைக்கொண்டுதான் வியாதியின் உருவத்தைச் சொல்லவேண்டுமென்று முற்காலத்திய பண்டிதர்கள் எழுதியுள்ளார். வசனப் பரீட்சை, நேத்திரப் பரீட்சை, மலப் பரீட்சை, ஜலப்பரீட்சை, நாவின் பரீட்சை இவைகளைப்பார்க்கச் சொல்லுகிறார்கள். இதை அஷ்டவிதக்குறியென்று தன்வந்திரி நாடியில் கண்டிருக்கிறது.

இதுகாறும் விவரித்துச் சொல்லவந்த காரணம் யாதெனில், நம் நண்பர்களுக்கு நம்முன்னோர் மருத்துவச்சாத்திரத்தின் அருமையை எடுத்துக் காட்டவேண்டுமென்கிற எண்ணமும், தற்போது நம்நாட்டு வைத்தியத்தைக் கையாண்டுவருந் தமிழ் மருத்துவர் சிலர் வாகடவிதியொன்றிலேயே ஆயுள்வேதம் அடங்கியதெனக் கருதியுள்ளவர்களுக்கு, முந்நாள் தமிழ்ச்செல்வர்கள் அசாத்திய ஊக்கத்துடன், சவச்சோதனை உடற்கூறு முதலியவைகளைப் பழுதறச்செய்தும் கற்றும் சிகிச்சை செய்தார்களென்று விளக்கிக் காட்டவேண்டிய விருப்பமுமே.

இக்காலத்தில் அந்நூற்கள் மறைந்தனவாயின் முன்னோர்கள் அக்காலத்தில் வடநூற்களை மொழிபெயர்த்துச் சிலவற்றை உபயோகித்ததுபோல், நாமும் நிகழ்காலத்தில் பலதேசசாத்திரிகள் பலபாஷைகளில் எழுதியுள்ளதை நம்பாஷையில் வரைந்து புத்தகங்களாக வமைத்துக் கிரமமாக ஆயுள்வேதத்தைக் கற்றலே உத்தமம்.

நடராஜன்,

Officier de Santé, புதுவை.

# பிறப்பிறப்பு.

(வெண்டாமரை க, இதழ் உ, 47 - ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி இராசாக்கள் துன்புறுதலையுஞ் சிறிதுரைப்பாம். சதுரங்க பலத்துடனே கூடிய அரசர்களும் தாம் பெற்ற பிள்ளைகள் தம்மைக் கொன்று அரசாட்சி செய்வார்களென்று நடுக்குறுவர். இதுவன்றியும் அரசர்கள் ஒருவருக்கொருவர் வெகுண்டு படையெடுத்து யுத்த களத்திற் போரிட அதனுற் சிறிது பேர் மரித்துஞ் சிறிதுபேர் துன்புற்றும் வருந்துவர். இனி விலங்குகளும் பறவைகளும் ஊர்வனவும் தாவரங்களுந் துயருறுமாறும் பேசுவாம். யானைகள் பாகனைச் சுமப்பதேயன்றி அவனிடத்து அங்குசம் பரிக்கோல் முதலியவற்றாலும், குதிரைகள் தம்மைத் திருத்தும் மாவுத்தனிடத்துக் கசையினுலும், ஒட்டகம் எருது முதலியன பாரங்களைச் சுமப்பதினுலும் துயருறும். இதுவன்றியும் யுத்த களத்தில் மாற்றார் கைப்பாணம் வாள் முதலியவற்றாலுந் துயருறும். கரடி புலி மான் முதலியவைகள் கானவர் வலையிற் சிக்குறுதலாலும் மற்றைய விலங்கின் கூட்டங்கள் புலி முதலிய துட்ட மிருகங்கள் பிடித்தலாலும் பேதுறுவதேயன்றி மழை பெயலிலாது புல் முதலிய வுணவுகளின்மையாலும் பெரிய துன்பமுறும். பறவைகள் வெயிலினுலும் மழையினுலும் வாடை வீசுவதனுலும் எரி குளம் முதலியனவற்றிற் சலங் குன்றி மச்சம் முதலிய உணவின்மையினுலும் வாட்டமுறும். இதுவன்றியும் காகமானது ஆகாயத்திற்சஞ்சரிக்கும்வலியான்கோட்டானுலும், கொக்கு குருவி முதலியன இராசாளி வல்லூறினுலும் ஒன்றற்கொன்று பகையாகிய பட்சிகளினுலும் பல துயரடையும். பாம்புகள் பாம்பாட்டிகளிடத்தகப்படுதலினுலும் தமது பகையாகிய கருடன் கீரி முதலியவற்றாலும், மீன் முதலிய நீர் வாழ் பிராணிகள் வலையிலகப்படுதலினுலும் வாதையுறும். கிருமி கீடம் முதலியன வேர்வையினுலும் ஈரத்தினுலும் நெருங்கியுற்பவித்து அன்றே வெயிலின் வெம்மையால் வெதும்பி மரிக்கும். தாவரங்களானவை தபசிகள் தரிக்கும் மாவுரிக்குப் பட்டை வெட்டுதலினுலும் பனிப் பெய்கையாலும் யானைகள் வேரைப் பறிப்பதினுலும் பலங் குன்றிப் பட்டுப்போகும். சிற்றுயிரும் சிறைச்சாலையாகிய வுடல பந்தத்தால் ஒருவன் பெற்ற பொருட் செல்வம் கல்விச் செல்வம் முதலியனவற்றைக் கண்டு மனங் கலங்கித் தனக்குக் கிடைக்கவில்லையே என்னுங் கவலையிலாழ்ந்தும், கால் நடையிற் செல்வோன் தனக்கெதிரே குதிரையேறி வருபவனைக் கண்டு தனக்கும் அவ்வாறு கிடைக்கவில்லையே

என்றும், அக் குதிரையாளி தனக் கெதிரே வரும் பல்லக்கூர்தியைக் கண்டு தனக்கப் பதவி கிடைக்கவில்லையே என்றும், அப் பல்லக்காளி தனக்கெதிரில் வருந் தேரூர்தியைக் கண்டு தானவ்வா றடையவில்லையே என்றும், இவ்வாறு எவ்வளவு செல்வாராகி வளமிக்கு வாழினும் ஒருவர்க் கொருவர் தம்மின் மேம்பாட்டாரைக் கண்டு தாமுமவ்வாறு தற்குவிரும் பிப் பின்னரும் பொருள் தேடித் தேடிப் பேதுறுதலேயன்றிப் பெற்ற தைக் கொண்டு பெரு மகிழ்ச்சி யடைபவர் ஒருவருமிலர். இதுவன்றி யும் பசிப்பிணியினுலும் வாத பித்த சிலேட்டும ரோகங்களினுலும் அப் பிணியைத் தீர்த்தற் பொருட்டு ஆகார ஔடதங்கள் உட்கொள்வதினு லும் நரை திரை மூப்பினுலும் பிரிவுறு முடலைச் சுற்றமெல்லாஞ் சூழ்ந்து கட்டி முத்தமிட்டுக் கதறுதலினுலும் துக்கமேயன்றி மரண காலத்தில் யமதூதரால் வருந் துயருக்கோ ரளவில்லை. இதுவன்றியும் அதனோடு மாதரை மைந்தரைத் தனத்தினைத் தானியங்களை நினைந்து இவைகளை இனியாரனுபவிப்பார் எனக்கு இவைகள் யாவும் அன்னியமாய்விட்டதே இவைகளை எவ்வாறு விட்டுப் போவோம் என்று ஏங்கி மனம் புழுங்கி நெஞ்சழிந்து வருந்துவர். அங்ஙனம் வருந்திப் பாம்பின் வாயிலகப்பட்ட தேரைபோற் றுயருற்றுச் சாகுங்காலத்தும் தமதான்மாவைப் பாதுகாக் குந் தருமம் ஒன்றும் செய்யக் கருதார். எம்பெருமான் றிருவடித் தாம ரையையுஞ் சிந்தியார். ஐயையோ! பாவிகளாய் மடிவர். மேலும் இம் மனித சரீரத்திலுள்ள ஆன்மா இருள் மலமணுகாது உறவாயுள்ள சோதி சொரூபராகிய சிவபெருமானைச்சேராது நீங்காப்பகையாயுள்ள அவ்விருள் மலச் சார்பால் வினைகளைத் தேடிப் பிறப்பிடை யழுந்துதலால் அச் சரீர மும் பகைபடும். இப்பெற்றிய வேதனைக்கோரளவில்லை. ஆனுலும் இதைவிடப் பெரிதாகிய துன்பமொன்றுண்டு; அது என்னை யெனின் ஒருவனிடத்து ஒன்றினை யாசிப்பதேயாம். இதனினும் பெரிதே யாசிப் போர்க்கில்லையென்பது. ஆகையால் ஒருவன்பாற் சென்று யாசியாமை யும் தன்னிடத்தே யாசிப்போர்க் கீதலும் இம்மை மறுமை இரண்டிடத் தும் இன்பமேயாம்.

(இன்னும் வரும்.)

ந. கண்ணுச்சாமிப்பிள்ளை,

சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை.

## பலசரக்குக் கடை.

---

### இண்டியன் டைவேர்ஷன் கிளப்.

புதுவைக்கடுத்த முதலியார்பேட்டை (The Indian Diversion Club) இண்டியன் டைவேர்ஷன் கிளப்பார், கடந்த மார்ச் மீ 30-உ சனிக்கிழமை யிரவில், சந்திரகாசன் என்னும் சரிதையை ஆங்கில மொழியில் நடித்துக்காட்டினார்கள். மேற்படியூர் ஸ்ரீமான் இராகவ செட்டியார் முதலிய இந்திய கனவான்களும், சில ஐரோப்பிய பார்விய கனவான்களும் பெண்மணிகளும் விஜயம் செய்திருந்தார்கள். 'விஷயா' என்ற வேடம் புனைந்த கனம் நடேசப்பிள்ளையின் பெண்வேடத்தின் பலிப்பும், நடிப்பும் யாவர் மனத்தையும் கவர்ந்துகொண்டன. 'துஷ்டபுத்தி' என்ற வேடம்பூண்ட கனம் இராமசுவாமி ஐயர் பேச்சுத்திறமையும் நடிப்பும் மிகநன்றாக இருந்தன. மேற்படி கிளப்பின் காரியதரிசியாகிய கனம் வியாசராவ் அவர்களது முயற்சியைப்போலவே அவர்கள் பூண்ட வேடமும் நடிப்பும் பாராட்டத் தக்கனவாயிருந்தன. பொதுவில் எல்லாம் நன்றாகவே யிருந்தது.

"கெடுவான் கேடு நினைப்பான்" என்ற தருமத்தை விளக்கிக் காட்டும் சந்திரகாசன் சரித்தத்தை இவர்கள் தெரிந்தெடுத்தது சிலாகிக்கத் தக்கதே. இந்திய சரித்தத்தை இந்திய வேடம்பூண்டு ஆங்கிலமொழியில் நடித்துக்காட்டிய இவர்கள், இந்திய மொழியிலேயே அதனை நடத்தியிருப்பார்களானால் அதன் இரசம் இன்னும்நன்றாக வெளிப்பட்டிருக்கும்.

* * *

### புதுவை கவர்னரின் விளம்பரம்.

வியாபாரம், வைத்தியம் முதலியவைகளின் சம்பந்தமான விளம்பரப் பத்திரிகைகளையும், ஜனங்களின் அழைப்புக்கடிதங்களையும் ஸென்ஸார் பார்வையிடவேண்டிய அவசியமில்லையென்று விளம்பரம் செய்திருக்கிறார். மற்றதற்கு விமோசனகாலம் என்றோ!

* * *

### விலை யேற்றத்தை அளவுபடுத்தல்.

பெங்களூரில் உணவுப் பொருள்களின் விலையும், வீட்டுவாடகையின் விகிதங்களும் அதிகரித்து விட்டமையால் அவற்றை ஓரளவுபடுத்த வேண்டுமென்று பெங்களூர் முனிசிப்பாலிட்டியார் மைசூர் கவர்ன்மெண்டாருக்குச் சிபார்சு செய்திருக்கின்றனராம். நம் புதுவை முனிசிப்

பாலிட்டியாரும் அங்ஙனம் செய்வார்களானல் ஏழைகளுக்கு எவ்வளவோ நன்மை செய்தவர்களாவார்கள். கருணை பிறக்குமா!

***

## ஒரு மலைச்சாதியார் செய்யும் தொந்தரவு.

பலுசிஸ்தானத்தைச்சேர்ந்த மாரிசனென்னும் மலைச்சாதியார் சிலகாலமாகச் சேத்ராம் என்னும் ஜாதியாருடன்கூடி, தந்திக்கம்பிகளை யறுத்தும், ரெயில்வண்டிகள் ஓடும்போது குறிபார்த்துத் துப்பாக்கியால் சுட்டும், கவர்னர் சொத்துக்களை யழித்தும் வருகின்றனர். அவர்களை யடக்குவதற்குரிய ஏற்பாடுகளெல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. அவர்கள் அடங்காதிருக்கின்றனர். ஆகாய விமானங்களும் அவர்களை யடக்கும்படி வேலைசெய்துவருகின்றன. அவர்களோடு சண்டையிட்டுக் காயமடைந்த துருப்புகளுக்கு, கிலட்சமஸ்தானத்துக்கான மன்னர் சுமார் 4000 ரூபாய்வரையில் உதவிசெய்திருக்கிறார். (லோகோபகாரி).

***

## மேல்நாட்டுப்போர் கீழ்நாட்டையும் சற்று எட்டிப்பார்க்கிறது.

ருஷ்யாவைச்சேர்ந்த சைபேரியாவிலுள்ள விளாடிவாஸ்டாக்கில் ஜப்பான் சேனைகளும் பிரிட்டிஷ் சேனைகளும் போயிருக்கின்றனவாம். சைபேரியாவில் சண்டைதொடங்கிவிட்டதென்று ருஷ்ய கவர்ன்மெண்டார் விளம்பரம் செய்திருக்கின்றனராம். விலையேற்றமாகவேனும் இந்தியாவுக்கு வேண்டிய சில பொருள்களைக் கொடுத்துக்கொண்டுவரும் ஜப்பானும் சண்டையில் இறங்கிவிடுமானல் அப்பொருள்களும் வாராமல் நின்றுவிடும். உணவுப்பொருள்களுக்கு எத்தேசத்தையும் எதிர்பாராத இந்தியா அப்பொழுதேனும் தனக்கு வேண்டிய பொருள்களைத் தானே செய்துகொள்ளுமா?

***

## உணவுப் பொருள்கள்.

சென்னை மாகாணத்தில் உணவுப்பொருள்கள் சுத்தமானவையாகக் கிடைப்பதில்லையென்றும், முக்கியமாக, நெய், பால், எண்ணெய், அரிசி,பருப்பு முதலியன கலப்படமாகவே விற்கப்படுகின்றனவென்றும், அதனல் ஜனங்களுக்கு நோய் முதலிய கெடுதிகள் ஏற்படுகின்றனவென்றும், அக்குறையை நிவர்த்தித்தற்பொருட்டுச் சென்னை கவர்ன்மெண்டார் ஒருமசோதா சித்தம்செய்திருக்கிறார்களென்றும் கேள்விப்படுகின்றோம். நம் புதுவை மாகாணத்தில் நமது கவர்ன்மெண்டார் அதுபோல் எப்போது செய்யப்போகிறார்களோ நாம் அறியோம்!

## ஸ்ரீ மகான் காபாத்ர சிவப்பிரகாச சுவாமிகள்.

சென்னையில் சாதுமகாசங்கத்தை ஏற்படுத்தி, பலர்க்கு ஞான நூல்களைப் போதித்து நல்வழிப்படுத்திவந்தவரும், சங்கத்தில் ஆண்டுகள் தோறும் விழாக்கொண்டாட்டங்கள் நடைபெறச்செய்தும் ஞான நூற்களை அச்சிட்டு வெளிப்படுத்தியும் அத்துவித வேதாந்தக் கொள்கையைச் சென்னை முதலிய இடங்களில் பரவச்செய்தவரும், புதுவை ஆநந்தாசிரம சாதுமகா சங்கத்தின் ஆண்டுவிழாக் கொண்டாட்டந்தோறும் சங்கமூர்த்திகளா யெழுந்தருளி, புன்முறுவல் பூத்த முகத்தோடு அன்பர்கட்கு அருள்பாலித்தவரும், பற்றற்றுப் பரமசாந்தமூர்த்தியாக விளங்கியவருமாகிய ஸ்ரீ காபாத்ர சிவப்ரகாச சுவாமிகள், ஏப்ரல் ௴ 5-௳ வெள்ளிக்கிழமையன்று சென்னையில் பரிபூரணதசையை யடைந்தார்கள். தங்கள் சங்கமூர்த்திகளாகிய சுவாமிகள் பிரிவுக்கு வருந்தும் புதுவை ஆநந்தாசிரம சாதுமகா சங்கத்தாரோடு நாமும் கலக்கின்றோம்.

---

## காலஞ்சென்ற பாதாங்கி K. முத்துசாமி உடையார்.

நமது கலைமகள் ஏற்பட்டநாள் முதற்கொண்டு சந்தாநேயராக இருந்ததுமன்றி, கலைமகள்பால் பேரன்புகொண்டு பல சந்தாநேயர்களைச் சேர்த்துத்தந்து ஆதரித்தும் வந்தவராகிய பாதாங்கி உபாத்தியாயர் ஸ்ரீமான் K. முத்துசாமி உடையார், பிங்கள ௵ பங்குனி ௴ ௬ ௳ தேகவியோகமடைந்ததைக் கேட்டுப் பெரிதும் வருந்துகின்றோம்.

---

## புத்தக வரவு.

### ஸம்ஸ்கிருத முதற்புத்தகம்.

இது டாக்டர் பண்டார்கார் ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ள சம்ஸ்கிருத முதற் புத்தகத்திற்குச் சரியான தமிழ்மொழிபெயர்ப்பாம். இளைஞா, முதியவர், ஆண்மக்கள், பெண்மக்கள் யாவரும் வடமொழியை இலக்கண அறிவுபெற்று எளிதிற் கற்குமாறு எழுதப்பட்டுள்ளது. வடமொழி பயில்வார்க்கு இப்புத்தகம் பெரிதும் பயன்தரக் கூடியதாகும். 244-பக்கம் கொண்ட இப்புத்தகத்தின் விலை அணுபன்னிரண்டே.

கிடைக்குமிடம்: P. S. ஜானகிராமய்யர், அய்யங்குள அக்ராகாரம், திருவண்ணாமலை. இதையனுப்பியவர்க்கு நன்றிசெலுத்துகின்றோம்.

ப-ர்.

# COCOANUT BUTTER OR COCOTINE.

## தேங்காய் வெண்ணெய்

அல்லது

# கொக்கொட்டின்.

இது கை படாமல் யந்திரத்தின் உதவியினால் தேங்காயிலிருந்து செய்யப்பட்டது.

சமையலுக்கு உபயோகப் படுத்திக்கொண்டு வருகிற நெய், கொழுப்பு, வெண்ணெய் முதலிய பதார்த்தங்களுக்குப் பதிலாக, மிகவும் சுத்தமாயுள்ள கோக்கோட்டின் என்ற தேங்காய் வெண்ணெயை நன்றாய் உபயோகப்படுத்தலாம்.

1917, 1918-ல் நடந்த மதராஸ் கைத்தொழில் காட்சியில் கோக்கோட்டின் உயர்ந்த தன்மையுடையதென நற் சாக்ஷிப் பத்திரம் கொடுக்கப்பட்டது.

விலை முதலிய விபரங்களுக்கு அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

பெஸ்ட் அண்டு கம்பெனி லிமிட்டெட்

மதராஸ் அண்டு புதுச்சேரி.